# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

C 8101964

1. District மாவட்டம் *Coimbatore* PS காவல்நிலையம் *V & AC* Year ஆண்டு *2023* FIR No. முதஅ எண் *08/2023/AC/CB* Date நாள்

2. (i) Act சட்டம்: *Prevention of corruption* Sections பிரிவுகள்: *7 (a)*
   (ii) Act சட்டம்: *Act 1988 as amended by* Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: *the Prevention of corruption Amendment Act - 2018* Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்

3. (a) Occurrence of Offence Day: குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் *20/07/2023* Date to நாள் வரை *27/07/2023*
   Time Period நேர அளவு Time from நேரம் முதல் *15.45* Time to நேரம் வரை *16.00 hrs*
   (b) Information Received at PS Date: காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் *27/07/23* Time நேரம் *07.45*
   (c) General Diary Reference Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் *07.45*

4. Type of Information Written/ Oral
   தகவலின் வகை எழுத்து மூலம் / வாய் மொழியாக *Tamil computer typed*

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் *About 6.6km West*
   Beat Number முறைக் காவல் எண் (b) Address முகவரி *office of village Administrative officer, Vadavalli Coimbatore District office.*
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S District:
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையின் அந்த காநி பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் *V.P. Manoharan* (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் *Palanisamy*
   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு *46/2023* (d) Nationality நாட்டினம் *Indian* (e) Passport No வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue வழங்கப்பட்ட நாள் Place of Issue வழங்கப்பட்ட இடம் *Door No. 155 Balaji nagar*
   (f) Occupation தொழில் (g) Address முகவரி *2 CR colony Vadavalli Pernur Coimbatore*

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   *1. Naveen, village Administrative Coimbatore District*
   *2. Manicamy office Assistant Vadavalli Coimbatore District.*

8. Reasons for delay in reporting by the complainant / Informant
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவுபட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவுபட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No 2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the investigation / Refused investigation / transferred to PS ................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே தந்த முறைப்பாட்டின் உள்ளவை பிரிவு 2ல் குறிப்பிட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுகிறது ........................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்று கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 21/7/23

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 21/07/2023

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும்
21/07/23 at 10.45 hrs

Name பெயர் D. SHEELA
Rank நிலை Inspector of Police
V&AC Coimbatore District

* GCP 240 34(Type 2) [illegible]

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

**கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.08/2023/ AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.**

இன்று 29.09.2023-ம் தேதி வெள்ளிக்கிழமை 09.20 மணிக்கு காவல் ஆய்வாளர் D.ஷீலா ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, கோயம்புத்தூர் பேரூர் வடவள்ளி I.O.B காலனி பாலாஜி நகரில் கதவு எண்-155 என்ற முகவரியில் வசித்துவரும் திரு.பழனிச்சாமி என்பவரது மகன் திரு.மனோகரன் என்பவர் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகம் ஆஜராகி கணினியில் தமிழில் தட்டச்சுசெய்யப்பட்ட புகாரை என்னிடம் கொடுத்தார். நான் அப்புகாரினை நான் படித்துப்பார்த்தேன். புகார் சம்மந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டதில், கோயம்புத்தூர் மாவட்டம் வடவள்ளி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரியும் திரு.நவீன் என்பவர் புகார்தாரரிடம் அவரது மகன் பாரதியின் பெயரில் பட்டா பெயர் மாறுதல் செய்வதற்கு கிராம உதவியாளர் திரு.மாணிக்கராஜ் என்பவரின் மூலமாக ரூ.2000/- லஞ்சம் கேட்டிருப்பது தெரியவருகிறது. மேலும் எதிரிகளின் நற்பெயர் குறித்து விசாரணை மேற்கொண்டதில் எதிரிகளின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் ஏதுமில்லை என்பதும் தெரியவந்தது. மேலும் புகார்தாரரிடம் பொறி வைப்பு நடவடிக்கை பற்றி விபரம் கூறி பொறி வைப்பு நடவடிக்கைக்கு விருப்பம் இருப்பின் எதிரி லஞ்சாமாக கேட்ட பணம் ரூ.2000/- பொறிவைப்பு நடவடிக்கையின் போது கொடுக்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. அவரும் தான் பொறிவைப்பு நடவடிக்கைக்கு விருப்பம் தெரிவித்து எதிரி லஞ்சாமாக கேட்ட பணம் ரூ.2000/-ஐ கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார். மேலும் நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்து எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பது தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று

29.09.2023-ம் தேதி 0945 மணி முதல் 1030 மணி வரை கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.08/2023/AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி மேற்படி எதிரி நவீன் மற்றும் மாணிக்கராஜ் ஆகியோர்கள் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன்.

புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு:-அனுப்புநர் V.P.மனோகரன் (46), த/பெ.பழனிச்சாமி, கதவு எண்-155 பாலாஜி நகர், I.O.B காலனி, வடவள்ளி, பேரூர், கோயம்புத்தூர். பெறுநர், காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, கோயம்புத்தூர். அய்யா/அம்மா, நான் வடவள்ளி I.O.B காலனி பாலாஜி நகரில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் B.E. சிவில் இன்ஜினிரிங் படித்திருக்கிறேன். நான் ஒப்பந்த அடிப்படையில் வீடு கட்டிக்கொடுக்கும் தொழில் செய்து வருகிறேன். நான் குடியிருக்கும், வடவள்ளி கிராமம் கா.ச.எண்.615/2A -ல் உள்ள எனக்கு சொந்தமான வீட்டினை எனது மகன் M.S.பாரதிக்கு கடந்த 14.09.2023-ம் தேதி வடவள்ளி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 6850/2023 மூலமாக செட்டில்மெண்ட் செய்து வைத்தேன். பின்னர் 19.09.2023-ம் தேதி எனது மகன் பாரதி பெயரில் பட்டா மாறுதல் பெற வடவள்ளியில் அமைந்துள்ள இ-சேவை மையத்தில் பதிவு செய்து அதற்கான ஒப்புகைசீட்டு எண் 2023/0103/12/507764 -ஐ பெற்றேன். எனது மகன் பாரதி வேலையில் பிசியாக இருப்பதால் பட்டா பெயர் மாறுதல் சம்மந்தமான வேலைகளை நானே பார்த்து வருகிறேன். அதன்பேரில் நான் கடந்த 20.09.2023-ம் தேதி எனது மகன் M.S.பாரதி பெயருக்கு பட்டா மாறுதல் பெறவேண்டி வடவள்ளியில் உள்ள கிராம நிர்வாக அலுவலரின் அலுவலகத்திற்கு சென்று கிராம நிர்வாக அலுவலர் திரு.நவீன் அவர்களிடம் பட்டா மாறுதல் பற்றிய விபரத்தை கேட்டேன். அவர் அவ்வலுவலகத்தில் இருந்த கம்பியூட்டரைப் பார்த்துவிட்டு பட்டா பெயர் மாறுதல் சம்மந்தமான என்னுடைய மனு தன்னிடம் நிலுவையில் உள்ளது என்றும் அதனை பரிந்துரை செய்து துணை வட்டாச்சியருக்கு அனுப்பி வைப்பதற்கு தேவையான ஆவணங்களை எடுத்து வரும்படியும், மேலும் தனக்கு லஞ்சமாக பணம் ரூபாய் 5000/- கொடுத்தால் மட்டுமே பட்டா மாறுதல் கிடைக்க பரிந்துரை செய்ய முடியும்

என்றும் கூறினார். அதற்கு நான் ஆவணங்களை எடுத்துக்கொண்டு வருகிறேன் என்று சொல்லி விட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். அதன்பிறகு 25.09.2023-ம் தேதி அன்று ஆவணங்கள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு மேற்படி கிராம நிர்வாக அலுவலகம் சென்று பார்த்தபோது கிராம நிர்வாக அலுவலர் திரு.நவீன் களஆய்விற்கு சென்றுவிட்ட விபரம் தெரிந்துகொண்டு நான் திரும்ப வந்துவிட்டேன். பின்பு 26.09.2023-ம் தேதி வடவள்ளி கிராம நிர்வாக அலுவலகம் சென்றபோது அங்கிருந்த கிராம நிர்வாக அலுவலர் திரு.நவீன் அங்கிருந்த உதவியாளர் திரு.மாணிக்கராஜ் என்பவரிடம் சொல்லியுள்ளதாகவும் அதனால் அவரை பார்க்கும்படி என்னிடம் சொன்னார். நான் திரு.மாணிக்கராஜை பார்த்தபோது அவர் என்னிடம் கிராம நிர்வாக அலுவலர் கேட்டிருந்த ஆவணங்களையும், அவர் கேட்ட பணத்தையும் கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார். நான் ஆவணங்களை கொண்டு வந்திருக்கிறேன் என்று சொல்லி பட்டா பெயர் மாறுதலுக்கு 5000 ரூபாய் ஆகுமா என்று அவரிடம் கேட்டேன் அதற்கு அவர் என்னிடம், பட்டாபெயர்மாறுதலுக்கு வழக்கமாக ரூ.5000/- வாங்குவார் ஆனால் நீங்கள் எங்களுக்கு தெரிந்தவர் என்பதால் உங்களிடம் 4000/-ஐ வாங்க சொல்லியிருக்கிறார் என்றும் சொன்னார். நான் அவ்வளவு பணம் தரமுடியாது என்று சொல்லி குறைத்துக்கொள்ளும்படி அங்கிருந்த கிராம நிர்வாக அலுவலரிடம் கேட்டேன். அதற்கு அவர் சரி ரூ.2,000/-ஐ எனக்கு கொடுத்திடுங்க உங்களுடைய பட்டாமாறுதலை நான் பரிந்துரை செய்துவிடுகிறேன். மற்ற வேலைகளையெல்லாம் நீங்களே பார்த்துக்கோங்க என்று சொன்னார். நானும் சரியென்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். அதன்பிறகு நேற்று 28.09.2023-ம் தேதி மாலை சுமார் 6.00 மணிக்கு எனது செல் நம்பர் 7339419999-லிருந்து கிராம அலுவலக உதவியாளர் மாணிக்கராஜூ செல்நம்பர் 9994028964-க்கு போன் செய்து எனது பட்டா மாறுதல் குறித்து கேட்டேன். அதற்கு திரு.மாணிக்கராஜ் நீங்க பணம் கொடுத்தால்தான் கிராம நிர்வாக அலுவலர் பட்டாமாறுதலுக்கு பரிந்துரை செய்வார் என்றும் அதனால் நாளை காலை அலுவலகம் வந்து கிராம நிர்வாக அலுவரைப்பார்த்து அவர் கேட்ட பணத்தை கொடுத்துட்டு வேலையை முடிச்சுட்டு போயிடுங்க என்றும் சொன்னார். பிறகு நான் யோசித்துப் பார்த்ததில் கிராம

நிர்வாக அலுவலர் எனது மகன் பெயரில் பட்டாமாறுதலுக்கு பரிந்துரை செய்வதற்கு அவர் என்னிடம் லஞ்சமாக கேட்கும் ரூ2000/-யை கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே என்னிடம் லஞ்சமாக ரூ2000/- பணம் கேட்ட வடவள்ளி கிராம நிர்வாக அலுவலர் திரு.நவீன் மற்றும் கிராம உதவியாளர் திரு.மாணிக்கராஜ் ஆகியோர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் நான் பட்டா பெயர்மாறுதல் சம்மந்தமாக 19.09.2023-ம் தேதியன்று கொடுக்கப்பட்ட ஒப்புகைசீட்டு எண் 2023/0103/12/507764-ன் நகலையும் இணைத்துள்ளேன். இப்படிக்கு sd.XXXXX 29/09/2023 (Manoharan). Respected Madam, Received the complaint on 29.09.2023 at about 09.20 hrs. sd.XXXXX, 29/09/2023, (D.Sheela). Inspector of Police, V&AC, Coimbatore. Respected Madam, After conducting a discreet enquiry, a case in Coimbatore V&AC Cr.No.08/2023/AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered by me on 29.09.2023 at 09.45hrs. sd.XXXXX, 29.09.2023 (D.Sheela). Inspector of Police, V&AC, Coimbatore. முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார் மனு மற்றும் 19.09.2023 தேதியிட்ட ஒப்புகைசீட்டு எண்.2023/0103/12/507764-ன் நகல் ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

29/09/23

(D.ஷீலா)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.